செய்தி வெளியீடு எண்:986 நாள்:29.10.2021

செய்தி வெளியீடு

மதுரை மாவட்டம், திருவேடகம் கிராமத்தைச் சேர்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு மாணவி செல்வி ஷோபனா, தான் கல்லூரி சேர்ந்து படிப்பதற்கு பண வசதியில்லாமல் ஏழ்மை நிலையில் இருப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு கடிதம் எழுதினார்.

அம்மாணவியின் கடிதத்தை கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவி செல்வி ஷோபனாவிற்கு மதுரை – ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் பி.பி.ஏ. பட்டப்படிப்பு பயில ஏற்பாடு செய்தார்.

தாயுள்ளத்துடன் உதவிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சென்னையில் நேரில் வந்து சந்தித்து நன்றி தெரிவிப்பதற்கு தன்னிடம் பணவசதி இல்லை என்று அம்மாணவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்.

பல்வேறு அரசு திட்டப் பணிகளின் ஆய்வுப் பணிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (29.10.2021) மதுரைக்கு வருகை தந்த போது, அரசு வாகனத்தை திருவேடகம் கிராமத்திற்கு அனுப்பி வைத்து, மாணவி செல்வி ஷோபனா மற்றும் அவரது பெற்றோரை மதுரை அரசு விருந்தினர் மாளிகைக்கு வரவழைத்து, அம்மாணவிக்கு பட்டப் படிப்பிற்கான புத்தகங்கள், புத்தகைப்பை, கல்வி உபகரணங்கள் மற்றும் நிதியுதவி வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்தினார், இந்நிகழ்வின் போது மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் உடன் இருந்தார்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9